[14th December 1959

Marketing Societies for Javadu Hill Tribes

*** 65 Q.—Sri S. M. ANNAMALAI :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையிலுள்ளவர்களுக்கு எத்தனை மார்க்கெட்டிங் சொசைட்டிகள் உள்ளன ? எங்கெங்கே ?

(ஆ) மேலும் சொசைட்டிகள் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) & (*b*) The Government approved in July 1958 a proposal for the organisation of a Co-operative Marketing Society for the Malayalees of Polur taluk living in the Javadu Hills. The society was registered on 21st August 1959. Besides this, there is no other proposal under the consideration of the Government at present.

Sri S. M. ANNAMALAI : அந்த ஜவ்வாது மலையில் இருந்து கடுக்கன், மணிபங்கன் போன்ற சில பொருள்கள் கிடைக்கின்ற காரணத்தினால் அந்தப் பொருள்களைக் கொண்டுவருபவர்களுக்குத் தகுந்த விலை கொடுத்து அதை வாங்கிக்கொள்ள இன்னும் அதிகமான சொஸைடிகளைத் திறக்க அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்லும் விஷயம் பரிசீலனை செய்யப்படும்.

Concessions to barber and dhoby communities

* 72 *Q.*—Sri S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the nature of aid given to barber and dhoby communities in the State to improve their conditions;

(*b*) whether there is any proposal to supply them with washing soda, materials for washing, razors, etc., free of cost; and

(*c*) whether there is any proposal to include them in the list of Scheduled Castes?

The Hon. Sri P. KAKKAN : (*a*) (1) Children belonging to barber and dhoby communities are given full-fee concessions at all stages of their education.

(2) Actual boarding and lodging charges are paid from the Harijan Welfare Department to students of these communities, who are staying in hostels as in the case of Harijan students.

(3) The local bodies have been advised to take steps to provide dhobi-kanas in their respective areas. Loans are also given to such of the local bodies who construct dhobikanas and who apply to Government for loans for the purpose if they are not able to meet the expenditure in question from their own funds.

(*b*) It is under consideration.

(*c*) There is no such proposal, Sir.

14th December 1959]

Sri S. M. ANNAMALAI : இந்தத் தொழிலாளர்களை தாழ்த் தப்பட்ட இனத்தில் சேர்க்க வேண்டுமென்று சில கோரிக்கைள் வந்ததா ? ஏன் அவர்களை தாழ்த்தப்பட்ட இனத்தில் சேர்க்கக் கூடாது ?

The Hon. Sri P. KAKKAN : அரசியல் அமைப்புச் சட்டப்படி அதை மத்திய சர்க்கார் ஒத்துக்கொள்ளாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Sri R. KRISHNASAMI NAIDU : கிராமப் பகுதியிலுள்ள சலவைத் தொழிலாளர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் இருவர் மூவராக இருந்து டோபிகானு போன்ற வசதிகள் இன்றி கஷ்டப் படுகிறார்கள். ஆக பல கிராமங்களிலுள்ளவர்கள் சேர்ந்து தண்ணீர் வசதியுள்ள இடத்தில் டோபிகானு ஆரம்பிக்க முன் வந்தால் அரசாங்கம் அவர்களுக்கு மான்யம் ஏதாவது கொடுக் குமா ?

The Hon. Sri P. KAKKAN : இப்பொழுது, அரசாங்கம் நகர சபைகளிலுள்ள மக்களின் சௌகரியத்தைக் கருதித்தான் டோபி கானு கட்டுவதற்கு உதவி செய்திருக்கிறது. கிராமப் பகுதிகளை இப்பொழுது எடுத்துக் கொள்ளவில்லை. தவிரவும், இதுவரையில் 1959-60-ல் டோபிகானு கட்டுவதற்கு 2,75,000 ரூபாய் கடனுகை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வேலூர் முனிசிப் பாலிட்டிக்கு 25,000-ம், செங்கோட்டை முனிசிப்பாலிட்டிக்கு 30,000-ம், கடலூர் முனிசிப்பாலிட்டிக்கு 20,000-ம், மதுரைக்கு 2 லட்சமும் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

Sri S. M. ANNAMALAI : வாஷிங் சோடா, கத்திகள் போன்ற கருவிகள் கொடுக்க பரிசீலனையில் இருந்து வருவதாக சொல்லப் படுகிறது. இரண்டு வருடங்களாக அது பரிசீலனையில் இருந்து வருகிறது. எப்போது அது பரிசிலிக்கப்படும்? கூடிய சீக்கிரம் முடிவு எடுக்கப்படுமா ?

Mr. SPEAKER : இது விஷயமாக 152-வது கேள்வி வருகிறது, அப்போது கேட்கலாம்.

Sri T. T. DANIEL : May I know whether these concessions are given to Christian barbers and dhobis and if not, will the Government go into the matter and give them also the same concessions?

The Hon. Sri P. KAKKAN : Concessions are given to Harijan-converted Christians and not to backward Christians.

Sri A. V. P. ASAITHAMBI : சலவைத் தொழிலாளர்களுக்கு வாஷிங் சோடா . . . .

Mr. SPEAKER : இதைப்பற்றி 152-வது கேள்வி வரும்போது கேட்கலாம்.

[14th December 1959

SRI K. VINAYAKAM : இந்த இரு வகுப்பினர்களுக்கும் கல்வி சலுகை, ஷெடியூல்ட் வகுப்பாருக்குத் தருவதைப் போன்று தருவதை ஆதரித்து அதே நேரத்தில் அவர்களுக்கு உத்தியோகம் பெறுவதில்கூட ஷெடியூல் வகுப்பினருக்கு தருகிற சலுகை இந்த இரு வகுப்பாருக்கும் தர முடியுமா ? அதுபற்றி அரசாங்கம் யோசித்திருக்கிறதா ? யோசித்தால் என்ன முடிவுக்கு வந்திருக் கிறது ?

THE HON. SRI P. KAKKAN : முதலில் சொன்ன பதில்படி கல்வி சம்பந்தப்பட்ட வரையில் இதே சலுகைகள் அளிக்கப்படு கிறது.

"Children belonging to Barber and Dhoby communities are given full-fee concessions at all stages of their education. Actual boarding and lodging charges are paid from the Harijan Welfare Department to students of these communities.'' உத்தியோகத்தைப் பொறுத்தமட்டில் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Midday-meals for poor pupils

* 81 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) how many poor pupils are provided with midday meals daily by the Harijan Welfare Department in the City of Madras;

(*b*) the amount allotted per pupil per day; and

(*c*) the aid given by the Government?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 2,491 pupils.

(*b*) Rs. 0–15 nP.

(*c*) A sum of Rs. 36,800 under State Budget and a sum of Rs. 18,800 from Grant-in-aid Schemes of the Government of India for Scheduled Castes are allotted for the City of Madras during this year. This aid represents the entire expenditure on the midday meals.

SRI K. VINAYAKAM : ஹரிஜன வெல்பெயர் டிப்பார்ட் மென்ட்டார் இலவச உணவு தருகிறது, அவர்கள் நடத்துகிற பள்ளிக்கு மட்டும்தானு அல்லது வேறு பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கும் தரப்படுகிறதா ? இல்லையென்ருல் அது பற்றி யோசிக்க முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜன வெல்பெயர் டிப்பார்ட் மென்ட் நடத்துகிற பாடசாலைகளில் ஹரிஜன குழந்தைகளுக்கும், ஜாதி ஹிந்து குழந்தைகளுக்கும் சாப்பாடு கொடுக்கப்படுகிறது. ஆனுல் ஹரிஜன் வெல்பெயர் டிப்பார்ட்மென்ட் நடத்தாத பள்ளி களில் ஹரிஜன குழந்தைகளுக்கு மட்டும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.